வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 | 05.06.2024 புதன்கிழமை | இதழ் : 157 | பக்கங்கள் : 12




### இந்திய பாராளுமன்ற தேர்தல்:

# எவருக்கும் பெரும்பான்மை இல்லை; ஆட்சி அமைப்பதில் இழுபறி நிலை!



புதுடில்லி, ஜூன் 05

இந்திய பாராளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனித்து பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால், எந்தக் கட்சி ஆட்சி அமைப்பது என்பதில் குழப்பம் - இழுபறி நிலைமை காணப்படுகின்றது.

நேற்றிரவு 11.30 மணி வரையான நிலவரப்படி தற்போதைய ஆளும் கட்சியான பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 286 தொகுதிகளில் வெற்றி பெற வாய்ப்புள்ளது. 213 இடங்களில் தனது

11

## தமிழ்நாடு, புதுச்சேரியில் 40 இடங்களும் தி.மு.கவுக்கு!

சென்னை, ஜூன் 05

இந்திய பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் தி. மு. க. தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்றது.

இந்திய பாராளுமன்றத் தேர்தல் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி தொடக்கம் ஜூன் 1ஆம் திகதி வரை 7 கட்டங்களாக நடைபெற்றது. தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரியில் தி. மு. க. தலைமையில் இந்தியா கூட்டணி, பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, அ. தி. மு. க. தலைமையிலான கூட்டணி, நாம் தமிழர் கட்சி என 4 முனை போட்டி நிலவியது.

11

# தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் சொத்துகளை முடக்கியது அரசு

கொழும்பு, ஜூன் 05

**ரி. ஆர். ஓ. என்று அறியப்பட்ட தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் சொத்துகள் மற்றும் நிதி முடக்கப்படுவதாக வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது அரசு.**

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரட்ணவின் ஒப்பத்துடன் இந்த வர்த்தமானி நேற்றுமுன்தினம் வெளியானது.

வர்த்தமானி அறிவித்தலின்படி, தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் இலங்கை மற்றும் சர்வதேசத்தில் உள்ள கிளைகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன. பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட செயல்பாடுகளும் பயங்கரவாதத்துக்கு காலத்துக்கு காலம் நிதியளித்தலுமே தடைக்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வு கழகம் தவிர உலக தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், உலக தமிழர் நிவாரண நிதியம், கனடிய தமிழர் தேசிய அவை, தமிழ் இளையோர் அமைப்பு உள்ளிட்ட 15 அமைப்புகளும் தடை செய்யப்பட்டுள்ளன. அவற்றின் சொத்துகள் மற்றும் நிதிகள்

11

## மின்சார சபை சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது

### உயர்நீதிமன்றம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 05

உத்தேச மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது. இதனை சிறப்பு பெரும்பான்மையால் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் இந்த ஆலோசனை தீர்ப்பை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் வாசித்தார்.

அத்துடன், "உத்தேச மின்சார சபை சட்ட மூலம் அரசமைப்பின் 121/1 என்ற சரத்தின் அடிப் படையில் உச்சநீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த சட்ட மூலம் அரசமைப்பின் 12 (1)

11

## புலிகளின் மூத்த தளபதி விநாயகம் காலமானார்!



பாரிஸ், ஜூன் 05

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் புலனாய்வு பிரிவின் மூத்த தளபதியான விநாயகம் என்று அறியப்பட்ட கதிர்காம சேகரம்பிள்ளை விநாயகமூர்த்தி (வயது 60) நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

யாழ்ப்பாணம் - தென்மராட்சி - வரணியை சொந்த இடமாகக் கொண்ட இவர், புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வசித்து வந்த

11

## படையினரை அழைக்க ஜனாதிபதி உத்தரவு!

கொழும்பு, ஜூன் 05

பொது பாதுகாப்புக்காக நாடு முழுவதும் ஆயுதப் படைகளை அழைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

பொதுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 12வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க புளொட் தீர்மானம்!

யாழ்ப்பாணம், ஜூன் 05

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது.

நேற்றைய தினம் மெய்நிகர் வழியே நடந்த அந்தக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகள் தமது தீர்மானகரமான முடிவுகளை அறிவித்து வந்தன. இந்த நிலையில், ரெலோ கட்சி ஆதரவைத் தெரிவித்தது.

இந்த நிலையில், தமிழ் பொது வேட்பாளர் விடயத் தில் தமிழீழ மக்கள் விடுதலை கழகம்

11

## நிவாரண நிதியை உயர்த்துக

### சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜூன் 05

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு நிவாரண நிதியாக 400 ரூபாயே வழங்கப்படுகிறது. இது எந்தவகையிலும் போதுமானதாக இல்லை. எனவே,

11

## பிரிட்டன் பாராளுமன்ற தேர்தல் யாழ். பெண்கள் இருவர் போட்டி!

லண்டன், ஜூன் 05

பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட பெண்கள் இருவர் போட்டியிடவுள்ளனர். இவர்கள் இருவரும் தொழில் கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ளனர்.

பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஜூலை 4ஆம் திகதி நடைபெறவுள்ளது.

2010ஆம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றிய பழமைவாத (கன்சர்வேட்டிவ்) கட்சி கடந்த 14 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தது. இந்தக் காலப்பகுதியில் 5 பிரதமர்கள் மாறியிருந்தனர்.

11

## நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மீறினால் நாடு பின்னோக்கி செல்லும்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஜூன் 05

சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ்) ஒப்பந்தங்கள் மீறப்படுமானால் நாடு பின்னோக்கிச் செல்லும். எனவே, அந்த உடன்படிக்கைகள் அனைத்தையும் அமுல்படுத்த பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருளாதார பரிமாற்ற சட்டமூலத்துக்கு ஆதரவளிக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பு என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கேகாலை கரவனெல்லையில் நேற்றைய தினம் குறைந்த வருமானம் பெறுவோருக்கு அரிசி வழங்கல், உறுமய திட்டத்தின் கீழ்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

நேற்று இந்தப் பத்தியில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் பரபரப்படையத் தொடங்கியிருப்பது பற்றி எழுதியிருந்தேன்.

அதுபோலவே, ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய அணி மாறல்களும் அதற்கான இரகசிய சந்திப்புகளும் கொழும்பில் தீவிரமடைந்துள்ள அதேவேளையில், மற்றுமோர் இரகசிய நகர்வும் இலங்கைக்கு வெளியே நடந்துகொண்டிருக்கின்றதாம்.

கடந்த பதினைந்தாம் ஆண்டு தேர்தலில் ராஜபக்ஷக்களை வீழ்த்துவதற்கான நகர்வுகள் மிக இரகசியமாக சிங்கப்பூரில் நடந்ததும் - அதில் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் முக்கிய அரசியல் பிரமுகருமான காலஞ்சென்ற மங்கள சமரவீர தலைமை தாங்கியமையும் பின்னர் தெரியவந்திருந்தது.

இதேபோன்ற ஒரு முயற்சி தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாம். இந்தத் தடவை ரணில் விக்கிரமசிங்கவையும் சஜித் பிரேமதாஸவையும் ஓரணியில் கொண்டுவரும் முயற்சியில் சிலர் ஈடுபட்டிருக்கின்றனர் எனவும் அதற்கான பேச்சுகள் இப்போது இரண்டாம் கட்டத் தலைவர்களுடன் நடந்துவருகின்றன என்றும் தெரியவருகின்றது. சிங்கப்பூரில் முகாமிட்டு இருந்துகொண்டு அதற்கான பேச்சுகளில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் பேச்சுகளில் கலந்துகொள்வதற்காக டசின்கணக்கானவர்கள் சிங்கப்பூரில் முகாமிட்டிருக்கின்றனர் எனவும் தெரியவருகின்றது.

இரண்டு கட்சிகளிலுமுள்ள இரண்டாம் கட்டத் தலைவர்களுடன் தொலைபேசி வழியாக நடந்துவரும் பேச்சுகள் சுமுகமாக நடந்தால் இரண்டு தலைவர்களும் நேரடியாகப் பேசி ஒரு முடிவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றதாம்.

சஜித் பிரேமதாஸவுக்கு இன்றுவரை மக்கள் ஆதரவு அதிகமாக இருக்கின்றபோதிலும் கடைசி நேரத்தில் வாக்களிக்கும் முடிவை எடுக்கின்ற "மிதக்கும் வாக்காளர்கள்" யாருக்கு வாக்களிப்பார்கள் என்பதை இப்போது தீர்மானிப்பது கடினமானது என்பதால் தேர்தல் முடிவுகள் மாற்றமடையலாம் என்று நம்பும் சில வெளிநாட்டு சக்திகள் ரணில் அல்லது சஜித் தரப்பினரை ஒன்றிணைப்பதன் மூலம் இருவரில் ஒருவரை நிச்சயம் வெற்றி பெறவைக்கலாம் என்று கருதுவதாகவும் அதற்காகவே இரு தரப்பையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் சில வட்டாரங்கள் தகவல் தந்தன. இன்றைய நிலையில் சஜித் பிரேமதாஸ முன்னணியில் இருந்தாலும் தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னர், ரணில் போட்டியிடுவது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பையும் வெளியிட்ட பின்னரே உண்மையான நிலைமை தெரியவரும் என்றாலும், தற்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க நாட்டை தற்போது கொண்டுசெல்லும் பாதையில் மாற்றங்கள் ஏற்படுவது நாட்டை மீண்டும் நெருக்கடிக்கு கொண்டுபோகலாம் என்பதாலேயே அவரையே இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆட்சியில் அமர்த்துவதன் மூலம் நாட்டின் பொருளாதார ஸ்திரதன்மையை தக்கவைக்க முடியும் என்று நம்பும் மேற்குலகும் அயல்நாடு ஒன்றும் தற்போது இருவரையும் ஒன்றிணைப்பதற்கான இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனவாம்.

சஜித் பிரேமதாஸவைப் பொறுத்தவரை இந்த தேர்தலில் வெற்றியடையாவிட்டால், அவரின் அரசியல் வாழ்க்கை கேள்விக்குரியதாக மாறிவிடும் என்பதால் இவ்வாறு இணைப்பு ஏற்பட்டாலும் தனக்கு பிரதமர் பதவி வழங்கப்படும் என்று உறுதியளித்தால் அதனை ஏற்றுக்கொள்ள அவர் தயராக இருக்கலாம். ஆனால், அவ்வாறு உறுதியளித்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த உறுதிமொழியை காப்பாற்றுவாரா என்ற சந்தேகமே சஜித்திடம் இருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால், ரணில் தரப்போ, சஜித் பிரேமதாஸவின் கட்சியிலிருந்து கணிசமான தொகையினரை பிரித்து எடுத்துவிட்டாலே சஜித் பலவீனமடைந்துவிடுவார் என்றும் அதுவே தமக்கான வெற்றியாகிவிடும் எனவும் கணக்குப்போடுகிறாராம்.

ஏற்கனவே அவரோடு இணைவதற்காக காத்திருக்கும் ராஜித சேனாரட்ன, சரத் பொன்சேகா, காவிந்த ஜெயலத் ஜெயவர்த்தன போன்ற சிலர் இந்த வாரத்திலேயே ரணிலுடன் இணைவதற்கு தயாராக இருந்தனர் எனவும் ஆனால், அவ்வாறு அவர்களை இணைத்துக் கொள்வதை சற்று தள்ளிவைக்குமாறும் கேட்கப்பட்டிருப்பதாகவும் அதனால் அந்த கட்சித் தாவல் பின்போடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அவ்வாறு இரண்டு கட்சிகளும் ஒன்றிணையும் சந்தர்ப்பத்தில், ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவை ரணில் பெறுவதை சஜித் தரப்பு விரும்பாது என்பதாலேயே அவர்களுடன் இணைந்து தேர்தலை சந்திக்கும் முடிவையும் ரணில் இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லையாம். இதனால் பொறுமை இழந்துபோன அந்தக் கட்சி, ரணிலிடம் அவர் தனது முடிவை விரைவாக அறிவிக்க வேண்டும் என்றும் அவர் பெரமுனவின் ஆதரவை நாடாத நிலை ஏற்படுமானால் தாம் தமது வேட்பாளராக தம்மிக பெரேராவை களம் இறக்குவதற்கு தயாராக வைத்திருப்பதாகவும் பெரமுன வட்டாரங்கள் தெரிவித்தன

**ஊர்க்குருவி.**

# மன்னார் மனிதப் புதைகுழியை பார்வையிட்டார் ஐ.நா. பிரதிநிதி



மன்னார், ஜூன் 05

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் என்ட்ரோ பிரஞ்ச் நேற்று மதியம் மன்னாருக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது, மன்னார் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தில் விசேட சந்திப்பும் இடம்பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச் சந்திரா மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளையும் சந்தித்து கலந்துரையாடினார்.

மேலும், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்களான சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் மற்றும் ரனித்தா ஞானராஜ் ஆகியோரையும் சந்தித்து மன்னார் மாவட்டத்தின் மனித உரிமைகள் நிலைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் நகர பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சதொச மனித புதைகுழியையும் அவர் நேரடியாக சென்று பார்வையிட்டார்.

இதன் போது, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி உள்ளிட்ட குழுவினருடன் மன்னார் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலைய பிரதிநிதிகள், மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தினர் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் போதைக்கு அடிமையான மகனை மீட்டு தருமாறு தாய் பொலிஸில் முறையீடு

யாழ்ப்பாணம், ஜூன் 05

போதைக்கு அடிமையான மகனை , போதைப்பழக்கத்தில் இருந்து மீட்டு தருமாறு தாயார் கோரியதையடுத்து , இளைஞனை மீட்டு நீதிமன்றின் ஊடாக புனர்வாழ்வு முகாமிற்கு பொலிஸார் அனுப்பி வைத்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் தாயொருவர் , தனது மகன் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார் எனவும் அவரை அந்த பழக்கத்தில் இருந்து மீட்டு தருமாறு மானிப்பாய் பொலிஸாரிடம் கோரியுள்ளார்.

அதனை அடுத்து இளைஞனை கைது செய்த பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தி நேற்று முன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றின் ஊடாக கந்தக்காடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பிவைத்துள்ளனர்.(அ)

# மதுபானசாலைகள் 7 நாட்களுக்கு பூட்டு

கொழும்பு, ஜூன் 05

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நாட்டின் பல பிரதேச செயலகங்களிலுள்ள மதுபானசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய பொசன் பண்டிகையை முன்னிட்டு குறித்த நாட்களில் மதுபானசாலைகள் மூடப்படும் என இலங்கை கலால் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மத்திய நுவரகம், கிழக்கு நுவரகம் மற்றும் மிஹிந்தலை ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் குறித்த காலப்பகுதியில் அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இரணைமடு நீர்ப்பாசனத்துக்கு நிலையான பொறிமுறை தேவை

## மாவட்ட செயலர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஜூன் 05

இரணைமடு நீர்ப்பாசனத்துக்கு நிலையான பொறிமுறை ஏற்படுத்தப்படவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட செயலாளர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வெளிகண்டல் பகுதியில் நெற்செய்கையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டை தீர்க்கும் விசேட கலந்துரையாடலில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்திற்கு இரணைமடுக் குளம் வரப்பிரசாதமானது. குறித்த குளத்திலிருந்து மேற்கொள்ளப்படும் விவசாயம் என்பது மாவட்டத்தில் முக்கிய இடமாக உள்ளது.

ஆனால், குறித்த குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொள்வதற் கான நிரந்தர பொறிமுறை இல்லை. வருடா வருடம் ஒவ்வொரு பிரச்சினை எழுகின்றது.

இந்த நீர்ப்பாசனத் திட்டத்திற்கான நிரந்தரப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். நீர்பாசன திணைக்களம் குறிப்பிடுவது போன்று, வான் கதவுகள் திறக்கப்படும் போது அழிவுகளை சந்திப்பவர்களும் உள்வாங்கப்பட வேண்டும் என்ன மன நிலை எல்லோருக்கும் உள்ளது.

இரணைமடுக் குளத்தின் நீர் குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் சென்றடையாது, பரந்துபட்ட மக்களிற்கும் கிடைக்கும் வகையில் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

வருடம் தோறும் புதிய புதிய பிரச்சினைகள் எழுகின்றது. இதற்கு நீர்பாசன திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனையுடன் விவசாயிகளையும் உள்ளடக்கி நிரந்தர பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

இந்த சிறுபோகத்தின் பின்னர் இந்த பிரச்னைக்கு முறையான பொறிமுறை ஊடாக தீர்மானம் எடுக்க வேண்டும்.

சில விவசாயிகள் என்னை சந்திக்கும்போது, எமக்கு தண்ணீர் தந்தால் போதும். சில தலைவர்கள் தமக்கு ஏற்றாப்போல் செயற்படுகின்றனர் என கூறுகின்றனர்.

விவசாய அமைப்புக்களின் தலைவர்கள் தமக்கு ஏற்றாப்போல் செயற்படாமல் உறுப்பினர்களின் விருப்பங்களை முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டும்.

முதலில் விவசாயிகள் பிரச்சினையை பெரிதாக்கிக் கொண்டே செல்லாமல், ஒற்றுமையாக இருந்து முரண்பாடுகள் இல்லாமல் தீர்க்க வேண்டும்.

இதில் ஒவ்வொருவரும் தமது விருப்பத்திற்கு அமைவாக செயற்பட முடியாது. இரணைமடு குளத்தின் கீழான விவசாயத்துக்கு நிரந்தர தீர்வு ஒன்றை வரையவேண்டும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.06.2024 புதன்கிழமை
குரோதி வருடம், வைகாசி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய தேர்தல் முடிவுகள் கூறுவது?

இந்தியாவின் தேர்தல் முடிவுகள் ஆளும் பாரதிய ஜனதா கட்சிக்கு சாதகமாக இருக்குமென்றே பல கணிப்புகள் கூறியிருந்தன. ஆனால், தேர்தல் முடிவுகள் அவ்வாறு அமையவில்லை. இது தொடர்பில் சோனியா காந்தி முன்னரே குறிப்பிட்டிருந்தார். அதாவது, “தேர்தல் முடிவுகள் கணிப்புகளில் கூறுவது போன்று அமையாது”, என்று அவர் கூறியிருந்தார். எனினும், அதனை எவரும் பெரிதாக பொருட்படுத்தவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் பிரதமர் மோடி தலைமையிலான ஆளும் பாரதிய ஜனதா கட்சி எதிர்பார்த்தவாறு வெற்றியை பெறவில்லை. தனிப் பெரும்பான்மையில் ஆட்சியமைக்க முடியுமென்னும் மோடியின் கனவு பலிக்கவில்லை. தற்போதைய நிலையில் கூட்டணி இல்லாமல் எவருமே ஆட்சி அமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்தியாவின் நிலைமைகள் தொடர்பில் குறிப்பிடுவதல்ல இந்தத் தலையங்கத்தின் நோக்கம் - மாறாக, இந்திய தேர்தல் முடிவுகளிலிருந்து இலங்கை எவ்வாறான பாடத்தை படிக்கலாம்?

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் யார் முன்னணி வகிப்பார்கள் என்பது பற்றி பல கணிப்புகள் ஏற்கனவே வெளியாகியிருக்கின்றன. குறிப்பாக, தற்போதைய நிலையில் சஜித் பிரேமதாஸ முன்னணி வகிக்கிறார் என்றும் இரண்டாவது நிலையில் அநுரகுமார திஸநாயக்க முன்னணி வகிக்கிறார் எனவும் சில கணிப்புகள் உண்டு. கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜே. வி. பி. மூன்று சதவீதமான வாக்குகளையே பெற்றிருந்தது. ஆனால், தற்போது அந்தக் கட்சியானது தேசிய மக்கள் சக்தியென்னும் புதிய முகத்துடன் மக்களிடம் செல்கின்றது.

இந்த நிலையில், அவர்களின் செல்வாக்கு 30 சதவீதத்தைத் தாண்டியிருப்பதாகக் கூறுக்கின்றனர். இது எந்தளவு சரியானது என்னும் கேள்வி உண்டு. இதேபோன்று, ரணில் விக்கிரமசிங்க மூன்றாவது நிலையில் இருக்கிறார் என்றே கணிப்புகள் கூறுகின்றன. அரசியல்வாதிகளும் அவ்வாறுதான் கூறுகின்றனர். இவ்வாறான முன்கூட்டிய கணிப்புகளை கருத்தில் கொண்டு தீர்மானகரமான முடிவுகளுக்கு வருவது ஆபத்தானது என்பதையே இந்திய தேர்தல் முடிவுகள் நமக்கு உணர்த்துகின்றன.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் மக்கள் எவ்வாறான மனோநிலையில் இருக்கின்றனர் என்பதை தற்போதைக்கு ஊகிப்பது மிகவும் கடினமானது. ஒவ்வொருவரும் தங்களின் எல்லைக்குட்பட்ட அவதானத்தின் அடிப்படையில் கணிப்புகளை வெளியிடுகின்றனர். இதேபோன்று அரசியல் தரப்புகளும் தங்களின் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் கருத்துகளை தெரிவிக்கின்றன. ஆனால், மக்கள் என்ன நினைக்கின்றனர் - யாரை விரும்புகின்றனர் என்னும் கேள்விக்கு தேர்தல் முடியும் வரையில் தீர்மானகரமான பதில் எவரிடமும் இல்லை. இறுதி நேரத்தில் நிலைமைகள் எப்படியும் மாற்றமடையலாம் - எதிர்பாராதவர் வெற்றியும் பெறலாம். பாரதிய ஜனதா கட்சியின் சரிவு இதனைத்தான் காண்பிக்கின்றது. ஜனநாயக அரசியலில் எவருக்கும் நிரந்தர சிம்மாசனம் இல்லை.

# மின்சார சபையை விற்க திட்டமிடுகிறது அரசாங்கம்

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 05

மின்சார சபையினை கூறுபோட்டு விற்க அரசாங்கம் திட்டமிடுகின்றது. அதனை மையப்படுத்தி கொண்டு வரப்படும் மின்சார சட்டமூலத்தில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சார சட்டமூலம் குறித்து அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மின்சார சபையை 12 பிரிவுகளாக பிரிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இதனூடாக மின்சார சபையை விற்பனை செய்யவும் அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது.

எனவே, உத்தேச மின்சார சபை சட்டமூலம் நிறைவேற்றப்படும் நடவடிக்கை தாமதப்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் கூறினார். (எ)

# தென்கிழக்கு பல்கலைக்கழக முன்றிலில் ஊழியர்கள் கறுப்புப்பட்டி போராட்டம்!



கல்முனை, ஜூன் 05

நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகளுக்கான உத்தரவாதம் எதனையும் அரசாங்கம் வழங்காத நிலையில் நேற்று தென்கிழக்கு பல்கலைக் கழக முன்றிலில் ஊழியர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தென்கிழக்கு பல்கலைக் கழக ஊழியர் சங்க தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தலைமையில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் கருத்து தெரிவித்த தாஜுடீன்,

நாங்கள் சொகுசுத் தேவைகளுக்காக போராடவில்லை. எங்களது போராட்டம் ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட நியாயமான கோரிக்கைக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்கள் வாழ்வை கொண்டு செல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஊழியர்களின் போராட்டம் காரணமாக பல்கலைக்கழகங்கள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன இதனால் மாணவர்களின் கல்விநிலை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இவைகள் தொடர்பில் அரசாங்கமோ அல்லது மாணவர்களோ கவலைப்பட்டதாக தெரியவில்லை. அவ்வாறு அவர்கள் கவலைப்பட்டிருந்தால் எங்களது நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் கருத்துக்களை யாவது வெளியிட்டிருப்பர் என்றும் இன்று இடம்பெறும் அமைச்சர்களுக்கு இடையேயான பேச்சுகளில் கோரிக்கைகள் தொடர்பில் நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம் - என்றார். (அ)

# எரிவாயு விலை குறைப்பு

கொழும்பு, ஜூன் 05

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் எரிவாயு விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ ஹாஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 12. 5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டர் 150 ரூபாயால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 3, 790 ரூபாயாகும்.

அத்துடன் 5 கிலோ கிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 60 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,525 ரூபாயாகும்.

மேலும் 2. 3 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 28 ரூபாயால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 712 ரூபாயாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவது நல்லது. எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

**இடபம்**
எதிலும் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
ராஜதந்திரமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் கடமையுணர்வுடன் செயல்படுவீர்கள். இனிமையான நாள்.

**கடகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும்.வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். அலுவலகத்தில் நிம்மதி உண்டு. உற்சாகமான நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். அளவாக பழகுங்கள். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**துலாம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு வரும். சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**விருட்சிகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**தனுசு**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். கனவு நனவாகும்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரர்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் இதுவரை வந்த கூச்சல் குழப்பங்கள் விலகி மகிழ்ச்சி அதிகரிக்கும். சோர்வு நீங்கி சுறுசுறுப்பாவீர்கள். நட்பு வட்டம் விரியும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

# தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் 40 தொகுதிகளிலும் தி. மு. க. வெற்றி

சென்னை, ஜூன் 05

மக்களவை தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் 40 தொகுதிகளிலும் தமிழ்நாட்டை ஆளும் கட்சியான தி. மு. க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.

இந்திய பாராளுமன்றத் தேர்தல் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி தொடக்கம் ஜூன் 1ஆம் திகதி வரை 7 கட்டங்களாக நடைபெற்றது. நேற்று முதல் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

நேற்றிரவு வரையான நிலவரப்படி தமிழ்நாட்டில் தி. மு. க. கூட்டணி 39 இடங்களையும் கைப்பற்றியது. தருமபுரி தொகுதியில் பா. ஜ. க கூட்டணியில் போட்டியிட்ட பா. ம. கவின் சௌமியா அன்புமணி தி. மு. க. வேட்பாளருக்கு நெருக்கமான போட்டி கொடுத்தார். இதே போன்று அ. தி. மு. க. கூட்டணியில் விருதுநகரில் போட்டியிட்ட விஜயபிரபாகரனும் ஓரளவுக்கு நெருக்கடி கொடுத்தார்.

இதேநேரம் எதிர்க்கட்சியான அ. தி. மு. க. கட்சி மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டது. பா. ஜ. க. இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. நாம் தமிழர் கட்சியும் கணிசமான வாக்குகளை பெற்றது.

அத்துடன், ஒரேயோர் தொகுதியை கொண்ட புதுச்சேரியிலும் தி. மு. க. கூட்டணியே கைப்பற்றியது. (ஐ)

# தி. மு. கவினர் கொண்டாட்டம்

சென்னை, ஜூன் 05

மக்களவை தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் முன்னிலை பெற்றதை அடுத்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி. மு. க. தொண்டர்கள் மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடு முழுவதும் மக்களவை தேர்தலில் பதிவான வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது. ஒட்டுமொத்த அளவில் பா. ஜ. க. கூட்டணியை தொடர்ந்து இந்தியா கூட்டணி அதிக இடங்களில் முன்னிலை வகித்தது.



தமிழ்நாடு, புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் தி. மு. க. தலைமையிலான கூட்டணி முன்னிலை வகித்தது. இதனால், அந்தந்த தொகுதிகளிலும் தி. மு. கவினர் கொண்டாட்டங்களில் ஈடுபட் டனர். (ஐ)

# அரிசி உற்பத்தியில் தமிழகம் பின்னடைவை சந்தித்தது ஏன்?

## முதல்வரை விளக்கமளிக்குமாறு கோரிக்கை




நாகபட்டினம், ஜூன் 05

இந்தியாவில் அரிசி உற்பத்தியில் 2ஆவது இடத்தில் இருந்த தமிழகம் 5ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது ஏன்? என்பதற்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் விளக்கம் அளிக்க வேண்டும் என காவிரி விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி. ஆர். பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தின் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், தமிழகத்தின் நீராதார உரிமைகள் பறிபோவதற்கு பொறுப்பேற்று நீர்ப்பாசனத் துறை செயலாளரை பணியிட மாற்றம் செய்ய வேண்டும். நீர்ப்பாசன முறைகளில் புலமை வாய்ந்த மூத்த அதிகாரியை செயலாளராக நியமிக்க வேண்டும்.

கர்நாடக அரசு தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நிலுவை தண்ணீரை வழங்க வலியுறுத்தி ஜூன்10ஆம் திகதி பூம்புகாரில் இருந்து மேட்டூர் அணை நோக்கி பேரணி நடத்தவுள்ளோம் என்றும் அவர் கூறினார். (ஐ)

# நாம் தமிழர் 8 தொகுதிகளில் 3ஆவது இடத்தில்

சென்னை, ஜூன் 05

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 8 தேர்தல் தொகுதிகளில் நாம் தமிழர் வேட்பாளர்கள் 3ஆவது இடத்தில் உள்ளனர். இந்தத் தொகுதிகளில் அ. தி. மு. க. மற்றும் பா. ஜ. க. கூட்டணி வேட்பாளர்களை நாம் தமிழர் வேட்பாளர்கள் பின்னுக்கு தள்ளியுள்ளனர்.

தமிழ்நாட்டில் 39 தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் உள்ள ஒரு தொகுதி என 40 பாராளுமன்ற தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக ஏப்ரல் 19இல் தேர்தல் நடந்தது.

நேற்று மதியம் வரையான தகவல்களின்படி தமிழ்நாட்டில் 8 தொகுதிகளில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்கள் 3ஆவது இடத்தில் இருந்தனர்.

புதுச்சேரி, தென்காசி, திருநெல்வேலி, திருச்சி, நாகை, சிவகங்கை, ஸ்ரீபெரும்புதூர், கன்னியாகுமரி உள்ளிட்ட 8 தொகுதிகளிலேயே நாம் தமிழர் மூன்றாவது இடத்தைப் பிடித்தனர். (ஐ)

# அண்ணாமலை தோல்வி

கோவை, ஜூன் 05

கோவை மக்களைவை தேர்தல் தொகுதியில் பா. ஜ.கவின் மாநில தலைவர் அண்ணாமலை தோல்வியை தழுவினார்.

இந்திய மக்களவை தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின. இதன்படி தமிழ்நாட்டின் கோவை தொகுதியில்,

தி. மு. கவின் கணபதி பா. ராஜ்குமார் 4 இலட்சத்து 33 ஆயிரத்து 521 வாக்குகளை யும் பா. ஜ. கவின் அண்ணாமலை 3 இலட்சத்து 46 ஆயிரத்து 244 வாக்குகளையும் அ. தி. மு. கவின் சிங்கை ராமச் சந்திரன் ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 651வாக்குகளையும் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தின்போது வாக்குவாதம்!

## குணதில்க ராஜபக்ஷ எம்.பி. காயமடைந்து வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூன் 05

**ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தின்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷ காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.**

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, கண்டி மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷவுக்கும் மஹிந்தானந்த அளுத்கமகேயுக்கும் இடையில் காரசாரமான வார்த்தைப் பரிமாற்றம் இடம்பெற்றது.

பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் சமரவிக்ரம தலையிட்டு சம்பவத்தை சமரசம் செய்தார் என தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், கூட்டம் முடிந்து வெளியேறும்போது மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் குணதிலக்க ராஜபக்ஷ இடையே மாடிப்படியில் வைத்து வாக்குவாதம் ஏற்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷ மாடிப்படியில் இருந்து விழுந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் படுகாயமடைந்த பாராளுமன்ற உறுப்பினர் இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குணதிலக்க ராஜபக்ஷவுக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேயை தொடர்பு கொண்டு வினவியபோது-

இதற்கு பதிலளித்த அவர், குணதிலக ராஜபக்ஷவுடன் வாக்குவாதம் செய்ததாகவும், எனினும், அவரை தள்ள முயற்சிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தை பார்த்த பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் சமரவிக்ரம, அவ்விடத்திற்கு வந்து பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷவை அழைத்துச் செல்ல முற்பட்ட போது அவர் தவறி விழுந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார். (அ)

# நீதிமன்ற தீர்ப்பு தொழிற்சங்க ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி

## பழனி திகாம்பரம் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 05



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு கிடைத்துள்ள வெற்றியாகும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபாவும், மேலதிகமாக பறிக்கப்படும் ஒரு கிலோ கொழுந்துக்கு 80 ரூபாவும் வழங்கப்பட வேண்டும் என்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு சகல தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் ஆதரவை வழங்கியிருந்தார்கள்.

முதலாளிமார் சம்மேளனம் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு வழக்குத் தாக்கல் செய்திருந்தது. எனினும் இந்த மனுவுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியுள்ளது. இது தொழிற்சங்க ஒற்றுமைக்கும், தொழிலாளர்களின் ஒற்றுமைக்கும் கிடைத்த வெற்றியாகும்.

மேலும், இந்த வழக்கு மேலதிக விசாரணைக்காக 29 ஆந் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அதுவும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சாதகமாகவே அமைந்து தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்-என்றார். (அ)

# இலஞ்சம் வாங்கிய தமிழ் அதிபர் கைது!

## 11ஆம் திகதிவரை விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 05

மதிய உணவுக்கான விலைமனு கோரலை பெற்றுக்கொடுப்பதற்காக, 30 ஆயிரம் ரூபாய் பணத்தை இலஞ்சமாக பெற்றதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட எஹலியகொட தமிழ் வித்தியாலயத்தின் அதிபரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டு அவிசாவளை நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அதிபர் அசோக்குமார் என்பவரின் விளக்கமறியலே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

விலைமனு கோரலை அனுமதிப்பதற்காக சந்தேகநபர் 30,000 ரூபாவை கேட்டதாகவும், ஆரம்பத்தில் 10 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொண்டதாகவும், மீதி 20 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொண்ட போதே கைது செய்யப்பட்டதாகவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தனர். (அ)

# புதிய நிர்மாணங்களுக்கு இடமளிக்க வேண்டாம்!

## ஜனாதிபதி ரணில் உத்தரவு



கொழும்பு, ஜூன் 05

களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் வெள்ளத்தை ஏற்படுத்தும் வகையிலும், மழை நீர் வழிந்தோடுவதைத் தடுக்கும் வகையிலும் மேற்கொள்ளப்படும் புதிய நிர்மாணங்களுக்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் சட்டவிரோதமான முறையில் நிலம் நிரப்பப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கும் முல்லேரியா மற்றும் ஐ.டி.எச் வைத்தியசாலைகளை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

கொலன்னாவை சேதாவத்த வெஹெரகொட ரஜமஹா விகாரையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்தோடு, வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நிரந்தர வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

குழாய்களைப் பயன்படுத்தி வெள்ளம் வேகமாக வடிந்து செல்ல வழிசெய்து, மக்களை துரிதமாக மீள்குடியேற்றுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (அ)

# நாடு முழுவதிலும் 250 புதிய பாலங்கள்

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 05

தேசிய மட்ட அபிவிருத்தித் திட்டங்களின் பயனை கிராமப்புற மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் வகையில் வீதி கட்டமைப்பை மேம்படுத்தி நாடு முழுவதும் 250 புதிய பாலங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2014-2024 காலப்பகுதியில் நெதர்லாந்து ஜென்சன் பிரிஜிங் நிறுவனத்தினால் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் 750 கிராமிய பாலங்களை வெற்றிகரமாக நிர்மாணித்து நிறைவு செய்ததை முன்னிட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்தப் பாலங்கள் ஊடாக இணைக்கப்பட்டுள்ள பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும் போது, குறைந்த வருமானம் பெறும் மக்களும் அதன் மூலம் பயனடைவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கிராமப்புறங்களில் உள்ள மக்கள் மீது அதிக கவனம் செலுத்துவதன் மூலம் பல்பரி



மாண வறுமையை 10 வீதம் வரை குறைக்க வேண்டும் என்பதே அரசின் எதிர்பார்ப்பு என்றும், கிராமப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தும் இவ்வாறான திட்டங்கள் அந்த இலக்கை அடைவதற்கு மிகவும் முக்கியமானவை என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்தத் திட்டத்துக்கு பங்களித்த நெதர்லாந்து அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். (அ)

# சீரற்ற காலநிலையினால் நோய்கள் பரவும் அபாயம்

கொழும்பு, ஜூன் 05



நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறு நோய்கள் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வயிற்றுப் போக்கு, தடுமல், வைரஸ் காய்ச்சல்கள் உள்ளிட்ட நோய்கள் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாகச் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இந்த நோய்களானது அசுத்தமான நீர் மற்றும் உணவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் இலகுவாகப் பரவக்கூடும் என கூறினார்.

காய்ச்சல், வாந்திபேதி, வயிற்றுப்போக்கு, வயிற்று வலி மற்றும் மலத்துடன் இரத்தம் கசிதல் உள்ளிட்டவை இந்நோய்களுக்கான அறிகுறிகளாகும்.

இந்நிலையில், குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் காய்ச்சல் விரைவாகப் பரவினால் அது வைரஸ் காய்ச்சலாகவும் இருக்கலாம்.

குளிர் காலம் காரணமாகக் குழந்தைகள் மத்தியில் காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சொத்துகளை பாதுகாக்க விசேட திட்டம்

**சாகல ரத்நாயக்க படையினருக்கு பணிப்புரை**

கொழும்பு, ஜூன் 05

**அனர்த்த சூழ்நிலையில் இருந்து பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ள மக்களின் வீடுகளையும் சொத்துக்களையும் பாதுகாக்க விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துமாறு இராணுவத்தினருக்கு ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.**

அத்துடன் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுகாதாரமான முறையில் உணவு வழங்கவேண்டும் எனவும் மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதில் கவனம் செலுத்துமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், அனர்த்த நிலை குறையும் வரை மக்களுக்கு நிவாரணம் வழங்க முப்படையினர் ஆளணி பலத்துடன் தற்காலிக மத்திய நிலையமொன்றை அமைக்குமாறும், தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் இராணுவத்தினருக்கு சாகல ரத்நாயக்க பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# இரத்தினபுரி-பாணந்துறை பிரதான வீதி முற்றாக தடை!

கொழும்பு, ஜூன் 05

களுகங்கை பெருக்கெடுத்து ஓடுவதால் இங்கிரியை அண்மித்த நம்பப்பன பிரதேசம் கடும் வெள்ள அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதுடன், இதன் காரணமாக இரத்தினபுரி-பாணந்துறை பிரதான வீதியின் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதன்படி, இரத்தினபுரி-பாணந்துறை வீதியானது இங்கிரிக்கு அருகிலுள்ள நம்பப்பன பகுதியிலிருந்து தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அதன்படி இங்கிரியவைச் சூழவுள்ள பல தாழ்நிலப் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன், நம்பபான, உறுகல, திபுல்பொத, கலேகம போன்ற பிரதேசங்களில் உள்ள மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு இங்கிரிய பொலிஸ், பிரதேச செயலகம், ஹொரண பிரதேச சபை, விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் அரச துறை அதிகாரிகள் உள்ளூர் மக்களுடன் இணைந்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதுடன், ஹொரணை பிரதேச சபை படகுச் சேவையையும் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மின்கம்பத்தில் மோதி இ.போ.ச. பஸ் விபத்து

கொழும்பு, ஜூன் 05

இரத்தினபுரி, புவக்கஹவெல பிரதேசத்தில் பஸ் ஒன்று வீதியிலிருந்த மின்கம்பமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. (அ)

# யாழ். மாநகர ஆணையாளருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தள்ளுபடி!

யாழ்ப்பாணம், ஜூன் 05

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளருக்கு எதிராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த ஆண்டு அறிமுகமான நீதிமன்றங்கள், நியாய சபைகள் மற்றும் நிறுவனங்களை அவமதிக்கும் சட்ட ஏற்பாட்டின் கீழ் நீதிமன்றை அவமதித்தார் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளருக்கு எதிராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் தொடுத்த வழக்கே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், மாநகர ஆணையாளர் சார்பில் கடந்த மாதம் 22ஆம் திகதி முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சிறு கோரிக்கை நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சிறு கோரிக்கை நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்யவேண்டும் என்ற வாதத்தை முன் வைத்திருந்தார்.

அந்நிலையில் குறித்த வழக்கு நேற்று முன் தினம் கட்டளைக்காக எடுத்து கொள்ளப்பட்ட போது, வழக்கு உரிய மன்றில் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஜனாதிபதி சட்டத்தரணியின் வாதத்தை மன்று ஏற்றுக்கொண்டு, வழக்கை தள்ளுபடி செய்வதாக மாவட்ட நீதிபதி சி.சதீஸ்தரன் கூறி வழக்கை தள்ளுபடி செய்தார். (அ)

# அநுராதபுரத்தில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூன் 05

அநுராதபுரம், மிகிந்தலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலுவெவ பகுதியில் உள்ள வீடொன்றின் பின்புறத்திலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மிகிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

மிகிந்தலை, பாலுவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிகிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# உலக சுற்றாடல் தினத்தில் தேசிய கொண்டாட்டம் ரத்து

**அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோரின் நலன் கருதி ஜனாதிபதி நடவடிக்கை**

கொழும்பு, ஜூன் 05

உலக சுற்றாடல் தினத்தின் தேசிய கொண்டாட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக பயன்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மக்கள் சிரமங்களை எதிர்நோக்கும் இந்த வேளையில் சிலர் விமர்சனங்களை முன்வைத்து அரசியல் ஆதாயங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக சுட்டிக்காட்டிய அவர், பாதிக்கப்பட்ட மக்களை அந்த நிலையிலிருந்து மீட்பதே அவசியம் எனவும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அரசாங்கம் என்ற வகையில் அவர்களுக்கு நிவாரணம் வழங்க ஆரம்பித்துள்ளோம். நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

மேலும், வெள்ள நிலைமை சீரானதன் பின்னர் அந்த பகுதிகளில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளுமாறு அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், டெங்கு போன்ற தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் உள்ளது. அவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளோம். மேலும் சேதமடைந்துள்ள பாலங்கள், வடிகான்கள், வீதிகள் ஆகியவற்றைப் புனரமைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளும் உள்ளூராட்சி அமைச்சும் இணைந்து அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பிரதேசங்களின் அபிவிருத்தி மற்றும் நலனுக்கான நிதி ஒதுக்கீடுகளை செய்துள்ளன. இந்த நடவடிக்கையில் பணத்தை மாத்திரம் கருத்திற்கொள்ளாமல் தேவையான பணிகளை செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

உலக சுற்றாடல் தினத்தின் தேசிய விழாவை இன்று நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த விழாவை இரத்து செய்து, அந்த நிதி ஒதுக்கீட்டை சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக பயன்படுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)




# பிரித்தானிய பஸ்களில் அநுரவின் புகைப்படம்!

கொழும்பு, ஜூன் 05

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க பிரித்தானியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் பிரித்தானியாவிலுள்ள இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றுவதற்காக பல பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு செல்கிறார்.

அவரின் பிரித்தானிய விஜயத்தை முன்னிட்டு, இலங்கையர்கள் பஸ்ஸில் அவரது புகைப்படங்களை ஒட்டியுள்ளனர்.

அநுரகுமார திஸநாயக்க அண்மையில் கனடா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு தொற்றுநோயாக உருவெடுக்கும் அபாயம்!

**உடனடியாக மருத்துவ சிகிச்சை பெற அறிவித்தல்**

கொழும்பு, ஜூன் 05

**டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இவ்வருடத்தின் மே மாதத்திலிருந்து வேகமாக அதிகரித்துள்ளதாகவும், இது ஒரு தொற்றுநோயாக உருவெடுக்கக்கூடும் எனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

தற்போது பெய்து வரும் கன மழையுடன் இந்த தொற்று நிலைமை ஏற்படக்கூடும் என அதன் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, நுளம்புகள் பெருகும் இடங்கள் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த வாரத்தில் டெங்கு அபாயத்துடன் கூடிய 15 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

அந்த 15 மாவட்டங்களாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, குருநாகல், புத்தளம், பதுளை, இரத்தினபுரி, கேகாலை போன்றவை அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும், டெங்கு அபாய வலயங்களாக 71 பிரிவுகள் சுகாதார வைத்திய அதிகாரியினால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் இதுவரை 24,920 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், அவர்களில் 09 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், இம்மாதத்தின் கடந்த இரண்டு நாட்களில் 106 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மே மாதம் 26ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் 93,974 நுளம்புகள் பெருகும் இடங்கள் கண்காணிக்கப்பட்டதாகவும், அவற்றில் 28,310 நுளம்புகள் பெருகும் இடங்கள் பதிவாகியுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், 3121 பேருக்கு சிவப்பு அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதைய மழை நிலைமை காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நுளம்பு ஒழிப்பு வாரத்திற்கு மேலதிகமாக எதிர்காலத்தில் ஓரிரு வாரங்களுக்கு இவ்வாறான துப்புரவு மற்றும் புகையூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

மேலும் இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால், உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறுமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது.

# 210 நபர்களின் பணம் சொத்துகள் முடக்கம்

**அரசாங்கம் நடவடிக்கை**

கொழும்பு, ஜூன் 05

பயங்கரவாத மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 15 அமைப்புகள் மற்றும் 210 நபர்களின் அனைத்து நிதி மற்றும் சொத்துக்களை முடக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன வெளியிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஐக்கிய நாடுகளின் கட்டளைகளுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 113 பேரின் அனைத்து பணம் மற்றும் சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# மின் கட்டணத்தில் திருத்தம்!

கொழும்பு, ஜூன் 05

2024ஆம் ஆண்டின் 2ஆம் காலாண்டுக்கான மின்சாரக் கட்டண முன்மொழிவு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு இந்த வாரம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தமது எக்ஸ் தளத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும், காலாண்டுக்கு ஒரு தடவை மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் செய்ய கடந்த ஆண்டு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, எதிர்வரும் ஜூலை மாதத்தில் திருத்தம் செய்யப்படவுள்ள மின்சாரக் கட்டண திருத்த முன்மொழிவு, இந்த வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

(அ)

# மதவாச்சியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜூன் 05

அநுராதபுரம், மதவாச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம், மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தனது காணிக்குச் சென்ற காட்டு யானையை விரட்ட முற்பட்டபோது இவ்வாறு யானை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, காயமடைந்தவர் மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

(அ)

# ரயில் சுரங்கப்பாதையில் மோதி வெளிநாட்டுப் பிரஜை மரணம்!

கொழும்பு, ஜூன் 05

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த உடரட்ட மெனிக்கே ரயிலில் சென்ற வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் ரயில் சுரங்கப் பாதையில் மோதி பரிதாபமாக உயிரிழந்துள்ளபர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றதாக நானுஓயா ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எல்ல பிரதேசத்தை நோக்கி ரயிலில் பயணித்த வெளிநாட்டு பிரஜையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ரயிலின் கதவில் ஆபத்தான முறையில் பயணித்தமையால் சுரங்கப் பாதையில் மோதி இவர் உயிரிழந்ததாக தெரியவருகின்றது.

நானுஓயா மற்றும் இதல்கஸ்ஹின்ன ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள ரயில் சுரங்கப்பாதையில் மோதி இவர் உயிரிழந்துள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதனையடுத்து உயிரிழந்தவரது சடலம் ரயில்வே பாதுகாப்புப் பிரிவினரின் உதவியுடன் ஹப்புத்தளை ரயில் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாக அதிகாரி மேலும் கூறினார்.

# மின்சார சட்டமூலத்தை சபையில் நிறைவேற்ற அவசரம் வேண்டாம்!

**சஜித் பிரேமதாஸ வேண்டுகோள்**

கொழும்பு, ஜூன் 05

மின்சார சட்டமூலத்தை அவசரமாக பாராளுமன்றில் நிறைவேற்றுவதை தவிர்த்து அதிலுள்ள குறைகளை தீர்க்குமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சார சட்டம் குறித்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை வாசித்ததன் மூலம் குறித்த சட்டத்தில் பாரிய பிரச்னைகள் இருப்பதாக அறிந்து கொண்டோம்.

அதனாலேயே மூன்றில் இரண்டு பெரும்பாண்மை அதிகாரத்தால் இங்கு சில பிரிவுகள் நிறைவேற்றப்படும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அரசாங்கத்திற்கு அந்த அதிகாரம் இல்லை.

எனவே, அதை அவசர அவசரமாக வியாழக்கிழமை கொண்டுவராது ,அதில் இருக்கும் குறைகளை ஆராய்ந்து உயர்நீதிமன்றத்தின் ஆலோசனைகளை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்து எதிர்காலத்தில் எதிர்காலத்தில் அது தொடர்பில் சரியான தீர்ப்பை எடுப்போம்.

அதேவேளை, எதிர்வரும் வியாழக்கிழமை மின்சார சட்டத்தை கொண்டுவந்து முழுமையாக அதனை குழப்பிக் கொள்ளாது, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கள், பரிந்துரைகள் என்பவற்றை சரியாக புரிந்து கொண்டு நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்குவதற்கு ஏற்ப குறைந்த ஒரு அலகிற்கான கட்டணத்தில் மின்சார கட்டணங்களை அறவிடுவது தொடர்பில் மின்சார சபைக்கும் நஷ்டம் ஏற்படாத வகையில் சாத்தியமான ஒரு எண்ணக்கருவை கொண்டு சிறந்த திட்டமொன்றை வகுப்பதற்காக இதனை ஆராய்வோம்.

எனவே, மின்சார சட்டத்திலுள்ள குறைகளை தீர்த்து இந்த விடயங்களை முன்கொண்டு செல்வோம்-என்றார்.

(அ)

# மின்சார சட்டமூலம் தொடர்பில் விவாதிக்க 2 நாட்கள் வேண்டும்

கொழும்பு, ஜூன் 05

மின்சார சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பாராளுமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், குறித்த சட்டமூலம் குறித்து விவாதிக்க இரு நாட்களை ஒதுக்குமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலே பங்கேற்கின்ற எதிர்கட்சியினர் மின்சார சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றத்தில் மூன்று நாள் விவாதத்தை கோரியிருக்க வேண்டும். அதையிட்டு நான் கடுமையான எதிர்ப்பை தெரிவிக்கின்றேன்.

இது மின்வலு தொடர்பான பிரச்னை. எதிர்கட்சி என்றாலும் ஆளுந் தரப்பு என்றாலும் மின்சார சட்டமூலம் தொடர்பில் இரு நாட்களை விவாதத்திற்கு எடுத்துகொண்டிருக்க வேண்டும். ஆனால் ஒரு நாளே விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த பிரச்னை தொடர்பில் கதைப்பதற்கும் எமக்கு போதுமான நேரம் ஒதுக்கப்படவில்லை.

அதேவேளை, மின்சார சட்டமூலம் தொடர்பில் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இலகுவான விடயமாக கருதுவது நியாயமில்லை.

எனவே, மின்சார சட்டமூலம் தொடர்பில் விவாதிப்பதற்கு இரு நாட்களை ஒதுக்குமாறும் சபாநாயகரிடம் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை இரண்டு நாட்களும் எமது பேச்சு சுதந்திரத்தை பறிக்க வேண்டாம்-என் றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மாகாண மட்டத்தில் முதல் இடம்!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் வாழ்த்து



மட்டக்களப்பு, ஜூன் 05

**மக்கள் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.எஸ்.எஸ். அமீர் அலியின் முயற்சியால் உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம், கல்வி வளர்ச்சியில் அடைவு மட்டத்தை எட்டி தொடர்ந்தும் பல சாதனைகளை படைக்க வாழ்த்துவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

கிழக்கு மாகாணத்தில் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் முதலிடத்தை பெற்றுள்ளமையை பாராட்டி மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போது வெளியாகியுள்ள 2023ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தோர் வீதத்தின் அடிப்படையில், கிழக்கு மாகாணத்தில் உள்ள 17 கல்வி வலயங்களில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயமானது 75.5 சதவீதமான சித்தி மட்டத்தை பெற்று, மாகாண மட்டத்தில் முதற்தர வலயமாக பிரகாசித்துள்ளமையை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்தின், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சரும் மக்கள் காங்கிரஸின் தவிசாளருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலியின் பங்களிப்பு மிக மேலானது. பல சவால்களுக்கு மத்தியில் இவ்வாறானதொரு பரீட்சை பின்னணியை தோற்றுவிப்பதற்கு அமீர் அலி அவர்கள் எடுத்த முயற்சிகள் அளப்பரியது.

அதேபோன்று, மக்கள் காங்கிரஸைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் மற்றும் கட்சியின் முக்கிய பிரதிநிதிகள் தொடர்ந்தேர்ச்சையாக குறித்த வலயத்தின் அவசியத்தை வலியுறுத்தி வந்தார்கள்.

குறிப்பாக, எமது கட்சியின் தவிசாளர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி இது தொடர்பில், ஜனாதிபதி, ஆளுநர், கல்வி அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோரை தொடர்ந்து சந்தித்ததோடு மட்டுமல்லாமல், அவர்களை சந்திப்பதற்கு என்னையும் பல இடங்களுக்கு அழைத்துச் சென்றதையும் இத்தருணத்தில் நினைவுகூறுவது பொருத்தமாகும்.

எமது கட்சியைப் பொறுத்தவரை, கிழக்கு மாகாண மக்களது அடிப்படை தேவைகளை மையப்படுத்தி, அதனை நிவர்நிவர்த்திப்பதற்காக என்றும் தியாகங்களை செய்து வருகின்ற ஒரு கட்சியாகும். அதன் அடிப்படையில் கிழக்கில், மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காக இந்த வலயத்தை உருவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டபோது, முடியாது என்று சொல்லி பலர் நிராகரித்த வேளையிலும் கூட, விடாப்பிடியாக அதன் இலக்கினை அடைந்ததுடன், எதிர்கால கல்விச் சமூகத்துக்கு தம்மாலான முழுமையான பங்களிப்பை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் அமீர் அலி அவர்கள் கடுமையாக உழைத்தார்.

இதன் பிரதிபலனாகவே இவ்வாறான பரீட்சை பெறுபேறுகளை எம்மால் நோக்க முடிகின்றது. கல்வி மேம்பாட்டுக்காக உதவியவர்களை என்றும் சமூகத்தில் இருந்து அப்புறப்படுத்தப் படமாட்டார்கள். அவர்கள் என்றும் நினைவு கூரப்படுவார்கள்- என்றார்.

(அ)

# அரோஹரா கோசம் முழங்க தாந்தாமலை மலைப் பிள்ளையாருக்கு கும்பாபிஷேகம்



மட்டக்களப்பு, ஜூன் 05

கிழக்கிலங்கையில் வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு மண்முனை தென்மேற்கு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய மலைப்பிள்ளையாருக்கான மகா கும்பாபிசேகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க சிறப்பாக நடந்தேறியது.

பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

தான்தோன்றிஈஸ்வரர் ஆலய பிரதம குருவும் தாந்தாமலை முருகன் ஆலய பிரதம குருவுமான சிவசிறி மு.கு.சச்சிதானந்தக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கிரியைகளில் ஈடுபட்டனர். சரியாக 11.18 மணியளவில் பிரதான கும்பம் சொரியப்பட்டது. தொடர்ந்து ஏனைய பரிவார மூர்த்திகளுக்கான கும்பங்கள் சொரியப்பட்டன.

ஆலய பரிபாலன சபை தலைவர் மு.அருணன் தலைமையிலான பரிபாலன சபையினர் கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இதனை முன்னிட்டு கடந்த முதலாம், 2ஆம் திகதிகள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த காலங்களில் விசேட பொதுப்போக்குவரத்துச் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மேலும் அடியார்களுக்கு ஆலய அன்னதான சபையினரால் அன்னதான ஒழுங்கும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# கல்முனை கிரீன்பீல்ட் வீட்டுத்திட்டத்தில் சுற்றாடல் பாதுகாப்பு வேலைத் திட்டம்

அம்பாறை, ஜூன் 05

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கல்முனை கிரீன் பீல்ட் வீட்டுத் திட்டப் பகுதியில் கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்திருந்த விசேட சுற்றாடல் பாதுகாப்பு வேலைத் திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மரக்கன்றுகள் நடப்பட்டதுடன் வடிகான்களும் குளக்கரைகளும் புறச்சூழல்களும் விசேடமாக சுத்திகரிப்பு செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் ஆலோசகருமான ஏ. கலீலுர் ரஹ்மான், மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம். பயாஸ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.அஹத், மேற்பார்வையாளர்களான எம். அத்ஹம், யூ.கே. காலிதீன், ஆர். லிங்கராஜா, கல்முனை பிரதேச செயலக சுற்றாடல் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.எம்.எம். அர்ஷாத், எம்.எம். றினா உள்ளிட்டோர் கலந்து கொண்டு இப்பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர்.

இவ்வேலைத் திட்டத்திற்கு கல்முனை பிரதேச செயலகம், "சமாதானம் மற்றும் சமூகப் பணி" நிறுவனம் என்பனவும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தன.



# சம்மாந்துறை கல்வி வலயத்தின் பணிப்பாளராக மகேந்திரகுமார்



காரைதீவு, ஜூன் 05

சம்மாந்துறை வலயகல்விப் பணிமனையின் நிரந்தர வலயக் கல்விப் பணிப்பாளராக மட்டக்களப்பு மேற்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராகவிருந்த செபமாலை மகேந்திரகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை வலயகல்விப் பணிமனையின் 11 ஆவது வலயக் கல்விப் பணிப்பாளரான எஸ்.மகேந்திரகுமார் நேற்று முன் தினம் திங்கட்கிழமை அலுவலகத்திற்கு வருகை தந்து கடமையேற்றுக்கொண்டார்.

அவருடன் அவரது பாரியார் மட்டக்களப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்சினி மகேந்திரகுமாரும் வருகை தந்திருந்தார். இவர் ஏலவே சம்மாந்துறை வலய முகாமைத்துவ பிரதி கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியான இவர், பணிப்பாளரைத் தேர்வு செய்யும் நேர்முகப் பரீட்சையில் தெரிவாகியதன் பலனாக, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக்க அவருக்கான நியமனத்தை வழங்கியிருந்தார்.

இவரது 26 வருட கால கல்வி சேவையில் அதிபராக, மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியின் அதிபராக, உதவி மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளராக, மற்றும் பட்டிருப்பு மட்டக்களப்பு மேற்கு பதில் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, ஏலவே கடமையில் இருந்த வலயக்கல்விப்பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கடந்த மாதம் 10ஆம் வெள்ளிக்கிழமை காலமானார்.

அந்த வெற்றிடத்தை நிரப்பு முகமாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தற்காலிக நியமனமாக கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீரை நியமித்திருந்தமை தெரிந்ததே.

புதிய பணிப்பாளரை கல்வி சார் உத்தியோகத்தர்கள் சார்பில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம் வை.யசீர் அரபாத்,எச்.நைரூஸ்கான், திருமதி நிலோபரா, பி.பரமதயாளன் ஆகியோர் மாலை சூட்டி வரவேற்றார்கள். பின்னர் அவர்களுடனான சந்திப்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மேற்குலக நாடுகள் வழங்கிய ஆயுதங்கள் மூலம் தாக்குதல்!

## ரஷ்யாவுக்குள் இலக்கை அழித்த உக்ரைன்

கீவ், ஜூன் 05

**மேற்குலக நாடுகள் வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்தி ரஷ்யாவுக்குள் உள்ள இலக்கொன்றின் மீது வெற்றிகரமாக தாக்குதல் மேற்கொண்டதாக உக்ரைன் அறிவித்துள்ளது. இதன் மூலம் ரஷ்யாவின் எஸ் 300 ஏவுகணை அமைப்பைத் தாக்கி அழித்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.**



ரஷ்யாவுக்குள் எஸ் 300 ஏவுகணை அழகாக எரிந்தது எனத் தெரிவித்துள்ள உக்ரைன் அமைச்சர், தாக்குதல் இடம்பெறுவதைக் காண்பிக்கும் படத்தை முகநூலில் பதிவிட்டுள்ளார்.

ரஷ்யாவுக்குள் தாக்குதலை மேற்கொள்வதற்கு மேற்குலகம் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கார்க்கிவ்வுக்கு அருகிலுள்ள ரஷ்ய பிரதேசங்கள் மீது உக்ரைன் தாக்குதலை மேற்கொள்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி அனுமதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் தாங்கள் வழங்கிய ஆயுதங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்த கட்டுப்பாடுகளை மேற்குலக நாடுகள் தளர்த்தியுள்ளன.

அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்தி உக்ரைன் தாக்குதலை மேற்கொண்டதா? என்பது தெரியவரவில்லை.

ரஷ்யாவுக்குள் தாக்குதலை மேற்கொள்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி அனுமதி வழங்கியதை உக்ரைன் ஜனாதிபதி வரவேற்றுள்ளார்.

இது தன்னுடைய படையினர் கார்க்கிவ் பிராந்தியத்தைக் காப்பாற்றுவதற்கு உதவும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)



மாலைதீவு தடை எதிரொலி

# இந்திய கடற்கரைகளுக்கு செல்ல இஸ்ரேல் மக்களுக்கு ஆலோசனை

டில்லி, ஜூன் 05

இஸ்ரேல் கடவுச்சீட்டு வைத்திருக்கும் நபர்கள் தங்கள் நாட்டுக்குள் நுழையத் தடை விதிப்பதாக மாலைதீவுகள் அரசு அறிவித்ததை அடுத்து, இந்தியக் கடற்கரைகளுக்கு சுற்றுலா செல்லுமாறு இந்தியாவிலுள்ள இஸ்ரேல் தூதரகம் தங்கள் நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் இந்தியாவிலுள்ள இஸ்ரேல் தூதரகம் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைத்தளப் பதிவில், "இஸ்ரேலியர்களை வரவேற்கவில்லை என்று மாலைதீவு அறிவித்துள்ளதால், அழகான சில இந்தியக் கடற்கரைகளை நாங்கள் பரிந்துரைக்கிறோம். இங்கே இஸ்ரேலியர்கள் அன்புடன் வரவேற்கப்படுவார்கள். அத்தோடு, மிகுந்த விருந்தோம்பலையும் நீங்கள் பெறுவீர்கள்.

நமது தூதரக அதிகாரிகள் இந்த இடங்களுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இந்தக் கடற்கரைகளை நாங்கள் பரிந்துரைக்கிறோம். எங்களின் பரிந்துரைகளை நீங்கள் சரிபார்த்துக்கொள்ளுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இலட்சதீவு, கோவா, அந்தமான் நிகோபர் தீவுகள், கேரளா ஆகியவற்றின் கடற்கரை படங்கள் இந்தப் பதிவில் இணைக்கப்பட்டுள்ளன. (எ)

# வன்முறை வழக்கிலிருந்து இம்ரான் கான் விடுதலை

இஸ்லாமாபாத், ஜூன் 05



பாகிஸ்தானில் இம்ரான் கான் பிரதமராக இருந்தபோது, அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த விவகாரம் பூதாகரமாக வெடித்த நிலையில், 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவருடைய ஆட்சி கவிழ்க்கப்பட்டது. புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் பொறுப்பேற்றார்.

இம்ரான் கான் மீது சுமார் 200 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில் சில வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் சிறையில் உள்ளார். அவர் மீதான மற்ற வழக்குகள் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுகிறது.

அந்த வகையில், 2022 இல் ஆட்சி கவிழ்ப்புக்குப் பின் நடந்த பேரணியின் போது பதிவு செய்யப்பட்ட இரண்டு வன்முறை - நாசவேலை வழக்குகளில் இருந்து இம்ரான் கானை இஸ்லாமாபாத் மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதிமன்று நேற்று விடுதலை செய்தது. இம்ரான் கான் தவிர, முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி, முன்னாள் தகவல் தொடர்பு துறை அமைச்சர் முராத் சயீத் மற்றும் அவரது கட்சியின் பிற தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

# ஆந்திராவில் தெலுங்கு தேசம் கூட்டணி ஆட்சி உறுதியானது

## ஜெகன்மோகன் கட்சிக்கு கடும் பின்னடைவு

அமராவதி, ஜூன் 05



தமிழகத்தின் அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் அடுத்து ஆட்சியமைப்பதை உறுதிப்படுத்தியுள்ளது தெலுங்கு தேசம் கட்சி, பா. ஜ. க., ஜனசேனா கூட்டணி. 175 சட்டப் பேரவை தொகுதிகளில் இக்கூட்டணி 154 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

தெலுங்கு தேசம் 130 தொகுதிகளிலும், ஜனசேனா 20 தொகுதிகளிலும், பா. ஜ. க. 7 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளன. அதேவேளை, ஆளும் ஒய். எஸ். ஆர். காங்கிரஸ் கட்சி 18 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. காங்கிரஸ் கூட்டணி பின்னடைவைச் சந்தித்து வருகிறது.

குப்பம் தொகுதியில் 9 ஆவது முறையாகப் போட்டியிட்டுள்ள தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு 9088 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார். இதேபோன்று புலிவேந்துலா தொகுதியில் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி 34964 வாக்குகளுடன் முன்னிலை பெற்றுள்ளார். பிட்டாபுரம் தொகுதியில் நடிகர் பவன் கல்யாண் 40693 வாக்குகளுடன் முன்னிலை பெற்றுள்ளார்.

நகரி தொகுதியில் போட்டியிட்ட ஆந்திர அமைச்சரும், நடிகையுமான ரோஜா இம்முறை பின்னடைவை சந்தித்து வருகிறார். ரோஜா 10376 வாக்குகள் பெற்றுள்ள நிலையில், அவரை எதிர்த்துப் போட்டியிடும் பானு பிரகாஷ் 18388 வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார். இதேபோல், ஜெகன்மோகன் கட்சியினருக்கு பல தொகுதிகளில் பின்னடைவே காணப்படுகிறது. (எ)

# அனைத்து நாடுகளும் பலஸ்தீனத்தை உடனடியாக அங்கீகரிக்க வேண்டும்

ஜெனீவா, ஜூன் 05

அனைத்து நாடுகளும் பலஸ்தீனத்தை உடனடியாக அங்கீகரிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் 146 நாடுகளைப் பின்பற்றி ஏனைய நாடுகளும் பலஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள், காஸாவில் உடனடி போர் நிறுத்தத்தை அமுல்படுத்துவதற்கு நாடுகள் தங்கள் அரசியல் இராஜதந்திர வளங்களைப் பயன்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

பலஸ்தீனத்தை அங்கீகரிப்பது என்பது பலஸ்தீன மக்களின் உரிமைகளை அவர்களின் போராட்டங்களை சுதந்திரம், விடுதலைக்கான அவர்களின் துயரங்களை அங்கீகரிப்பதாகும் என ஐ. நா. நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். பலஸ்தீனத்திலும் மத்திய கிழக்கிலும் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கான முன் நிபந்தனை இதுவென ஐ. நா. நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# மெக்சிக்கோவின் முதல் பெண் ஜனாதிபதியானார் கிளாடியா

அகாபுல்கோ, ஜூன் 05



மெக்சிக்கோ நாட்டில் 200 ஆண்டுகால தேர்தல் வரலாற்றில் முதல் பெண் ஜனாதிபதியாக கிளாடியா ஷீன்பாம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனை அதிகாரபூர்வ விரைவான எண்ணிக்கை (Quick Count) உறுதி செய்துள்ளது. தன்னுடன் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட எதிர்க்கட்சி வேட்பாளர்கள் இருவர், தனக்கு வாழ்த்துச் சொல்லியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"நான் மெக்சிக்கோ நாட்டின் முதல் பெண் ஜனாதிபதி ஆகிறேன். இது எனது வெற்றி மட்டுமல்ல. நம் அனைவருடைய வெற்றியாகும். தாய்மார்களுக்கான வெற்றி. இதன் மூலம் மெக்சிக்கோ ஜனநாயக நாடு என்பதை நாம் நிரூபித்துள்ளோம்" என கிளாடியா ஷீன்பாம் தனது வெற்றி உரையில் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்கைகளின் நீர்மட்டம் உயர்வதால் பல பகுதிகளுக்கு வெள்ள அபாயம்!

## மக்களை அவதானமாக இருக்க பணிப்பு

கொழும்பு, ஜூன் 05

நில்வள கங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்தமையால் மேலும் பல கிராமங்களுக்கு சிவப்பு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



திஹகொட, மாத்தறை, மாலிம்பட ஆகிய பிரதேசங்களில் உள்ள பல கிராமங்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் நீரியல் பிரிவு பணிப்பாளர் எஸ்.பி.சி.சுகீஸ்வர தெரிவித்தார்.

இதேவேளை, அத்தனகல்லு ஓயா, கிங் கங்கை, களனி மற்றும் களு கங்கைகள் தொடர்ந்தும் அபாய மட்டத்தில் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்தனகல்லு ஓயா பெருக்கெடுத்ததால் கம்பஹா நகரம் தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கம்பஹா வைத்தியசாலை வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுவதால் வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். (அ)

# கடுவலை நகரம் நீரில் மூழ்கியது!

கொழும்பு, ஜூன் 05

களனி கங்கை பெருக்கெடுத்ததை அடுத்து, கடுவெல நகரம் நீரில் மூழ்கியுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அதிவேக வீதியின் கடுவெல உட்பிரவேச பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இன்னிலையில் வாகனச் சாரதிகள் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு இடர் முகாமைத்துவ நிலையம், சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)




# எதிர்வரும் நாட்களில் மழை குறைவடையும்

கொழும்பு, ஜூன் 05

எதிர்வரும் சில நாட்களில் படிப்படியாக மழை குறையும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன் தென்மேற்கு பருவமழை மே மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரை தொடரும் என்றும் அவர் கூறினார்.

இந்நாட்களில் மழை குறைந்தாலும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான பலத்த மழை பெய்தால், முன்னறிவிப்பு தொடர்பில் முன்கூட்டியே அறிக்கை வெளியிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வெள்ள நீரில் 4 பேர் மாயம்!

## எங்குருவாதொட பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 05

வெள்ள நீரில் விளையாடிக் கொண்டிருந்த 4 பேர் நீரோட்டத்தில் சிக்கி அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

நிவிவெடல் தோட்டம், நேபட பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞனே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

அவர்களில் மூவர் அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டதாகவும் ஒருவர் காணாமல் போனதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போன இளைஞனைக் கண்டுபிடிக்க பிரதேசவாசிகளும் எங்குருவாதொட பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாலிதவின் கருத்துகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன!

## இராஜாங்க அமைச்சர் வக்கும்புர

கொழும்பு, ஜூன் 05

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்த கருத்துகளை சில கட்சிகள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக திரிபுபடுத்தியுள்ளன. அவை குறிப்பிடுவதுபோன்று ஜனாதிபதியோ, அரசாங்கமோ தேர்தலை நடத்தாமலிருக்கத் திட்டமிடவில்லை என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்பர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் 2



வருடங்கள் கால அவகாசம் வழங்கினால் சிறந்தது என்றே பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு ஓகஸ்ட் வரை பாராளுமன்றத்துக்கு பதவி காலம் உள்ளது. ஜனாதிபதியால் கலைக்கப்படாவிட்டால் அடுத்த வருடம் வரை பாராளுமன்றம் இயங்கும். எதிர்வரும் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அரசியலமைப்பில் அவ்வாறே கூறப்பட்டுள்ளது. அதற்கமையவே நாம் செயல்பட வேண்டும். ஜனாதிபதியும் அதனை பல சந்தர்ப்பங்களில் உறுதிபட கூறியுள்ளார்.

ஆனால், சில அரசியல் கட்சிகள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அவர் கூறிய விடயத்தை திரிபுபடுத்தி பெரிதாகக் காண்பிக்கின்றன. தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு ஜனாதிபதி முயற்சிக்கிறார் என்றும் அந்த கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.

ஆனால், ஜனாதிபதியோ அரசாங்கதோ தேர்தலை நடத்தக்கூடாது என்று எண்ணவில்லை. கடந்த வரவு - செலவு திட்டத்தில் நிதி அமைச்சர் என்ற ரீதியில் அவர் ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதியை ஒதுக்கியுள்ளார் - என்றார். (ஐ)

# என் மீது நடவடிக்கை எடுக்க ஐ.தே.கவுக்கு அதிகாரமில்லை

## கூறுகிறார் ரஞ்சித் மத்தும பண்டார

கொழும்பு, ஜூன் 05

என் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகாரம் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் உறுப்புரிமை வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ஐக்கிய தேசியக் கட்சி இந்த நாட்டில் கேலிக்கைக்குரிய ஒரு கட்சியாக மாறிவருகின்றமை கவலையளிப்பதாக தெரிவித்தார்.

அரசியலமைப்பு தொடர்பாக அறியாத ஒருவரே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக செயற்படுவதாகவும், 2020 ஆம் ஆண்டின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமை தனக்கு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகாரம் இல்லை எனவும், ஐக்கிய மக்கள் சக்தியுடன் கடந்த நான்கு வருடங்களாக தான் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தலில் வெற்றி பெறும் கூட்டணியாகவே ஐக்கிய மக்கள் சக்தி உருவாகியிருப்பதாகவும், ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் கேலிக்கையான விடயங்களை தெரிவிப்பதை நிறுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இந்த நாட்டில் மக்கள் ஆதரவு சஜித் பிரேமதாசவுக்கே உள்ளதாகவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தாமே அமோக வெற்றி பெறுவோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மக்கள் ஆணையற்ற ஜனாதிபதியின் பதவியை நீடிப்பதற்கு ஐ.தே.க. முயற்சி

## சமிந்த விஜேசிறி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 05

ஜனாதிபதி பதவியில் தொடர்ந்தும் நீடிப்பதற்கே ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனை குறிப்பிட்டார்.

கள்வர்களை பாதுகாப்பதற்கும் அவர்களை, அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கும் ஜனாதிபதி தொடர்ந்தும் இடமளித்து வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நடத்தப்படவேண்டும்



எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், மக்கள் ஆணையில்லாத ஜனாதிபதி ஒருவரை பதவியில் நீடிக்க வைப்பதற்கு பாலித ரங்கே பண்டார முயற்சிப்பதாகவும் சமிந்த விஜேசிறி கூறினார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க இடைக்கால ஜனாதிபதியாக மாத்திரமே நியமிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்நாடு...

நேற்று காலை முதல் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இதன்படி, தமிழ்நாட்டின் 39 தொகுதிகளிலும் புதுச்சேரியின் ஒரு தொகுதியிலுமாக 40 தொகுதிகளிலும் தி. மு. க. கூட்டணி வெற்றி பெற்றது.

இந்தத் தேர்தலில் வழக்கமாக இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் அ. தி. மு. க. கூட்டணி பின்னடைவை சந்தித்தது. அதன் இடத்தை பா. ஜ. க. கூட்டணி கைப்பற்றியுள்ளது. இதே போன்று, நாம் தமிழர் கட்சியும் கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ளது. (ஐ)

(தொடர்புடைய செய்திகள் பக்கம் 4இல்)

## புலிகளின்...

நிலையில் நுரையீரல் புற்றுநோய் காரணமாக உயிரிழந்தார்.

தமிழீழ விடுதலை புலிகள் முன்னெடுத்த பல தாக்குதல் நடவடிக்கைகளுக்கு இவர் புலனாய்வுக்கு தலைமை தாங்கியிருந்தார். அத்துடன், பல புலனாய்வு போராளி களை உருவாக்கியிருந்தார். கட்டுநாயக்கா விமான படைத்தளம் மீதான தாக்குதலில் இவரின் பங்களிப்பும் இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மின்சார...

இற்கு முரணானது - 84 (2)இன் கீழ் சிறப்பு பெரும்பான்மையால் (மூன்றில் இரண்டு ஆதரவு) மட்டுமே நிறைவேற்ற முடியும். முன்மொழிவுகளின்படி சட்ட மூலத்தை திருத்தும்பட்சத்தில் முரண்பாடுகளை தீர்க்க முடியும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

மின்சார சபை சட்டமூலம் மீதான விவாதத்தை நாளை வியாழக்கிழமை நடத்துவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

உயர்நீதிமன்றத்தின் அறிவுறுத்தலை அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, விமல் வீரவன்ஸ, தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட பலர் விவாதத்தை நடத்த கால அவகாசம் கோரினர்.

இவர்களுக்கு பதிலளித்த எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர உச்சநீதிமன்றின் தீர்மானத்தின்படி சட்ட மூலத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தார்.

விவாதத்தில் பங்கேற்ற ஹர்ஷ டி சில்வா எம். பி. மின்சார சபை சட்ட மூலம் தொடர்பில் 2 நாள் விவாதத்தை நடத்துமாறு கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்திகள் பக்கம் 7இல்)

## நாணய...

காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் மேலும் கூறியவை வருமாறு,

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளின் பிரகாரம் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமாக பேணுவதற்கு பல பொருளாதார இலக்குகளை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இந்த இலக்குகளை மீறுவது நாட்டின் பொருளாதாரத்தை அழிவு பாதையில் இட்டுச் செல்லும். அரசியல் இலாபத்துக்காக மேடைகளில் வீணாகப் பேசிக் கொண்டிருக்காமல் நடைமுறையில் இருக்கும் கட்டமைப்புக்குள் மாத்திரம் பேசுவது எதிரணியின் பொறுப்பு.

நாட்டுக்கான பொறுப்புகளை ஏற்காமல், சம்பிரதாய அரசியலில் ஈடுபட்டதால் எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் எதிர் வரிசையில் இருக்கின்றன. இந்த சவாலை அச்சமின்றி ஏற்றுக் கொண்டதால் அரசாங்கம் அதன் வெற்றிகரமான முடிவுகளை இன்று வெளிப்படுத்தியுள்ளது. எனவே, நாட்டு நலனுக்காக அனைவரையும் ஒரே பாதையில் பயணிக்க அழைப்பதாகவும் கூறினார். (ஐ)

## தமிழ்...

தனது தீர்க்கமான முடிவை எடுப்ப தற்காக நேற்று கூடியது. இன்றைய அரசியல் நிலைமையிலும் கடந்த கால படிப்பினைகளில் இருந்தும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதே பொருத்தமானது. எனவே, அதனை ஆதரிப்பது என்று அந்தக் கட்சியின் மத்திய குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதற்கு புளொட் கட்சி தீர்மானித்துள்ளது. (ஐ)

## பிரிட்டன்...

இந்தநிலையில், பழமைவாத கட்சியின் கடந்தகால செயல்பாடுகளில் பிரிட்டன் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இந்த நிலையில், தொழில் கட்சியே நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறும் என்ற கணிப்பு நிலவுகின்றது. இம்முறை தேர்தலில், இலங்கை - யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட பெண்கள் இருவர் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். சட்டன் தொகுதியில் கிருஷ்ணி ரிஷிகரன், கிழக்கு லண்டன் தொகுதியில் உமா கிருஷ்ணன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர். (ஐ)

## தமிழர்...

முடக்கப்பட்டுள்ளன.

மேலும், விடுதலைப் புலிகள் மற்றும் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதியளித்தனர் என்ற குற்றச்சாட்டில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக 113 பேரின் சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வு கழகம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் நடத்தப்பட்ட தொண்டு நிறுவனமாகும். இந்த அமைப்புக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் சொத்துகளும் பல வங்கிகளில் கணக்குகளும் உள்ளன. 2009 போரில் விடுதலை புலிகள் அமைப்பு செயலிழந்ததை தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வு கழகமும் உள்நாட்டில் செயலிழந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிவாரண...

நிவாரண நிதியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட வேண்டுகோளை முன்வைத்தார்.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் பொலிஸ் அதிகாரிகள், பாதுகாப்பு பிரிவினர் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரும் குறுகிய காலத்துக்குள் இந்த நிவாரண நடவடிக்கைகளை வழங்க எடுத்துவரும் முயற்சிக்கு எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அனர்த்தம் காரணமாக அதிகமானவர்களுக்கு உணவு, உடை என அனைத்தும் இல்லாமல் போயிருக்கின்றன. இதனால் இவர்களுக்காக முறையான வேலைத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும். மாவட்ட செயலகங்களுக்கு மேலதிகமாக 10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த நிதி போதாது.

தற்போது நிவாரண நிதியாக ஒரு குடும்பத்துக்கு 400 ரூபாயே வழங்கப்படுகின்றது. இந்தத் தொகை எந்த வகையிலும் போதாது.

அத்துடன் நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் முற்றாக மாற்றப்பட வேண்டும். முறையான அனர்த்த முகாமைத்துவ நிவாரண வேலைத்திட்டத்தை அரசாங்கம் அமைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# இத்தாலியில் வேலைவாய்ப்பு என்றுகூறி பண மோசடியில் ஈடுபட்டவர் மறியலில்

கொழும்பு, ஜூன் 05

இத்தாலியில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி, பேராதனை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இத்தாலியில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி நபரொருவரிடமிருந்து 12 இலட்சத்து 50,000 ரூபாய் பணம் பெற்று மோசடி செய்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டு கண்டி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவரை நாளை 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்!

கொழும்பு, ஜூன் 05

உள்ளூராட்சி நிறுவனங்களின் நிரந்தரமற்ற ஊழியர்கள் அனைவரும் விரைவில் அரச நிரந்தர ஊழியர்களாக்கப்படுவார்கள் என இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிரந்தர நியமனம் வழங்கப்படாத இந்த 8,400 பேரையும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் நேர்காணல் நடத்தி, பணி மூப்பு அடிப்படையில் உறுதி செய்வதற்கான ஆவணத்தை, 15ஆம் திகதிக்குள் தயார் செய்ய வேண்டும் என அனைத்து உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பிறகு விரைவில் திகதி ஒன்று அறிவிக்கப்பட்டு, நிரந்தர நியமனத்தை பெற்றுத் தருவோம் - என்றார். (அ)

# வெள்ளம் பார்க்க படகில் சென்றவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 05

புலத்சிங்கள பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தைப் பார்ப்பதற்காக நேற்று முன் தினம் மாலை படகில் சென்றவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

படகு ஒன்றில் 20 பேர் கொண்ட குழு ஒன்று சென்றபோது, குறித்த படகு உயர் மின்கம்பியில் மோதி மின்சாரம் தாக்கியதில் புலத்சிங்கள திவலகட பிரதேசத்தைச் சேர்ந்த லொகு சின்ஹாரச்சிகே தமித் குமார என்ற இளைஞர் உயிரிழந்துள்ளார்.

ஏனையோர் உயிர் தப்பியதாக புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த குழுவினர் பயணித்த படகை உயிரிழந்த இளைஞர் ஓட்டிச் சென்றதுடன், துடுப்பை ஏந்தியபோது உயர் நிலை மின்கம்பியில் மோதி வெள்ளத்தில் விழுந்துள்ளார்.

படகில் இருந்தவர்களும் மின்சாரம் தாக்கி படகுக்குள் விழுந்ததாகவும், ஆனால் அவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லையென்றும் பொலிஸார் கூறினர். (அ)

## எவருக்கும்...

வெற்றியை உறுதி செய்துள்ளது.

காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி 235 தொகுதிகளில் வெற்றி பெற வாய்ப்புள்ளது. 179 இடங்களில் தனது வெற்றியை அந்தக் கட்சி உறுதி செய்துள்ளது. ஏனைய கட்சிகள் 22 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன.

543 உறுப்பினர்களை கொண்ட இந்திய பாராளுமன்றத்தில் ஆட்சி அமைப்பதற்கு 272 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேவை. இந்தியாவை தற்போது ஆளும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றபோதிலும் அந்தக் கூட்டணியிலிருந்து பீகாரின் நிதிஷ் குமார் தலைமையிலான ஜனதா தளம் கட்சியும் ஆந்திராவின் சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சியும் வெளியேறுவதாக அறிவித்துள்ளன. இதனால், தேசிய ஜனநாயக கூட்டணி 28 ஆசனங்களை இழக்கிறது.

பா. ஜ. க. கூட்டணியிலிருந்து வெளியேறும் இந்த இரு கட்சிகளும் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து வேறு கட்சிகளும் ஆதரவளிக்கும்பட்சத்தில் இந்தியா கூட்டணி ஆட்சி அமைப்பதற்கு வாய்ப்புள்ளது. இந்தியா கூட்டணி நிதிஷ் குமாருக்கு துணைப் பிரதமர் பதவியை வழங்கி அவரை கூட்டணிக்கு அழைத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டதாக இந்திய பிரதமர் மோடி அறிவித்துள்ள போதிலும் அந்தக் கட்சி மூன்றாவது தடவையாகவும் ஆட்சி அமைப்பதில் சந்தேகம் - குழப்பம் - இழுபறி நிலவுகிறது. (ஐ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# சீரற்ற காலநிலையினால் இதுவரை 26 பேர் மரணம்!

## 130,021 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜுன் 05

**நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 26 பேர் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, சீரற்ற வானிலையால் 41 பேர் காயமடைந்ததாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

அத்துடன், 23 மாவட்டங்களின் 262 பிரதேச செயலகப் பிரிவுகளில் 33 ஆயிரத்து 422 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 21 பேர் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த பிரதேசங்களில் அரசாங்கத்தால் நடத்தப்படும் 116 பாதுகாப்பு நிலையங்களில் 2,368 குடும்பங்களைச் சேர்ந்த 9,248 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# சாதாரண தர விடைத்தாள்கள் மதிப்பீட்டு பணிகளில் மாற்றம்!

கொழும்பு, ஜுன் 05

மோசமான வானிலை காரணமாக, 2023 (2024)க.பொ. த சாதாரண தர பொதுத்தேர்வு விடைத்தாள்கள் மதிப்பீடு தொடங்கும் திகதியை மாற்றியமைக்க உள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட உள்ள அதிகாரிகளுக்கு ஏற்படும் சிரமங்களை கருத்தில் கொண்டு, நாளை தொடங்க இருந்த முதல் கட்ட மதிப்பீட்டு பணியை ஜுன் 8ஆம் திகதி தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, முதல் கட்ட விடைத்தாள் மதிப்பீடு ஜுன் 8 ஆம் திகதி முதல் ஜுன் 17 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 101 மையங்களில் நடைபெறும் என்று பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# பல்கலை. அனுமதிக்கு விண்ணப்பம் கோரல்!

கொழும்பு, ஜுன் 05

புதிய கல்வியாண்டுக்கான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 14ஆம் திகதி முதல் ஜுலை மாதம் 5ஆம் திகதி வரை கோருவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதி கையேடு இம்முறை ஆணைக்குழுவின் இணையத்தளமான www.ugc.ac.lk இலிருந்து மட்டுமே கிடைக்கும். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக இம்முறை அதனை அச்சிட முடியவில்லை.

விண்ணப்பத்தில் ஏதேனும் திருத்தங்கள் இருந்தால், அதற்கு மேலும் மூன்று வார காலஅவகாசம் அளிக்கப்படும். அதாவது, ஜுலை 19ஆம் திகதி வரை விண்ணப்பதாரர்கள் ஒருமுறை மட்டுமே திருத்தங்களைச் செய்ய முடியும்.

விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஒகஸ்ட் கடைசி வாரம் அல்லது செப்ரெம்பர் முதல் வாரத்தில் மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச மதிப்பெண்களை வெளியிடவும் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. (அ)

# மின்சார சட்டமூலம் குறித்து தவறாக புரிந்து கொண்டுள்ளது எதிர்க்கட்சி!

## உரிய தினத்தில் வாக்கெடுப்பு சபையில் அமைச்சர் காஞ்சன உறுதி

கொழும்பு, ஜுன் 05

மின்சார சட்டமூலம் குறித்து உச்சநீதிமன்றம் கொடுத்த விளக்கத்தை எதிர்க்கட்சி தலைவர் தவறாக விளங்கிக் கொண்டுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மின்சார சட்டமூலம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில், அரசியலமைப்புக்கு ஏற்புடையது இல்லாவிட்டாலும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

இந்த பாராளுமன்றத்தில் பல்வேறு சட்ட திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

எனவே, எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்ட 12 சட்டங்களில் நாம் பார்க்கும்போது அதில் அரசியலமைப்பு முரண் என ஒரு தீர்ப்பும் வழங்கப்படவில்லை.

அதேவேளை, மின்சார சட்டமூலத்தை நாம் உடனடியாக கொண்டுவரப்படவில்லை. கடந்த ஒன்றரை வருடமாக பாராளுமன்றத்தில் பல்வேறு தரப்புக்கள் மற்றும் குழுக்களுடன் கலந்துரையாடப்பட்டே கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பில் கலந்துரையாட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்தோம்.

மின்சார சட்டமூலம் குறித்து 12 வழக்குகள் விசாரிக்கப்பட்டே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, எதிர்வரும் 06 ஆம் திகதி மின்சார சட்டமூலம் தொடர்பில் விவாதிப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். அன்றையதினமே வாக்கெடுப்பையும் நடாத்தவுள்ளோம் - என்றார். (அ)

# அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம்!

## அவசர அமைச்சரவை பத்திரத்துக்கு அங்கீகாரம்

கொழும்பு, ஜுன் 05

பலத்த மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அவசர அமைச்சரவை பத்திரத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் பிற்பகல் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான அவசர அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்க ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தீர்மானித்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கும் முற்றாக சேதமடைந்த வீடுகளை அரச செலவில் பாதுகாப்பு படையினரின் உதவியுடன் புனரமைப்பதற்கும் உரிய பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# காணாமல்போன தாய், மகளை கண்டுபிடிக்க உதவி கோரும் பொலிஸார்



கொழும்பு, ஜுன் 05

காணாமல்போன தாயையும் மகளையும் கண்டுபிடிப்பதற்காக கட்டுநாயக்கா பொலிஸார் பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

26 வயது பெண்ணொருவரும் 4 வயது சிறுமியொருவருமே இவ்வாறு காணாமல்போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் கடந்த மே மாதம் 29 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

காணாமல் போன பெண்ணின் கணவர் இது தொடர்பில் கட்டுநாயக்கா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த படத்தில் உள்ளவர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் 071 8591639 அல்லது 011 2252222 என்ற கட்டுநாயக்கா பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# பாதுகாப்பு அமைச்சு ஆலோசனைக் குழு உறுப்பினராக முஜிபுர் எம். பி. நியமனம்

கொழும்பு, ஜுன் 05

பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழுவில் பணியாற்ற பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை சபாநாயகரின் அறிவிப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். சபாநாயகர் தனது அறிவிப்பின்போது,

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றுக்கு அமைவாக, பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவுக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழு மற்றும் பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காகவும் முஜிபுர் ரஹ்மான் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் அறிவித்துள்ளார். (எ)

# இளைஞர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த இருவர் சிக்கினர்!

கொழும்பு, ஜுன் 05

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் இளைஞர்களுக்குப் போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் கட்டுநாயக்கா பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்யும் போர்வையில் கேரளக் கஞ்சா போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சந்தேகநபரிடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இவருக்குப் போதைப்பொருள் வழங்கியதாகக் கூறப்படும் கொழும்பு, மதுரங்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய சந்தேகநபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் சந்தேகநபர்களிடமிருந்து 750 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org